**செ.வெ.எண் :639** **நாள்: 01.10.2021**

# தஞ்சாவூர் மாவட்டத்தில் 21 முதியோர் இல்லங்கள் செயல்பட்டு வருகிறது- மாவட்ட ஆட்சித்தலைவர் திரு தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறையின் சார்பில் உலக முதியோர் தினம் விழா மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் அவர்கள் தலைமையில் இன்று (1.10.2021) நடைபெற்றது.

இவ்விழாவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையேற்று துவக்கி வைத்து, முதியோர் தின விழாவை முன்னிட்டு நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற முதியோர்களுக்கு பரிசு சான்றிதழ்கள் மற்றும் 2 முதியோர்களுக்கு நடைப்பயிற்சி சாதனங்களை வழங்கி, மருத்துவ பரிசோதனை முகாமினை துவக்கி வைத்து பேசியதாவது:-

முதியோர்களின் வாழ்வை மேம்படுத்தும் வகையில் கடந்த 1990ஆம் ஆண்டு முதல் அக்டோபர் 1ம் தேதியை உலக முதியோர் தினமாக ஐக்கிய நாட்டு சபை அறிவித்தது. கடந்த 2002ஆம் ஆண்டிலிருந்து சர்வதேச அளவில் முதியோர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. முதியோர் சுதந்திரம், பங்களிப்பு, வயதானவர்களை மதித்தல், கௌரவித்தல் போன்றவை உலக முதியோர் தினத்தின் முக்கிய நோக்கமாகும். குழந்தைகளுக்கு மட்டும் தான் எதிர்பார்ப்புகள் இருக்கும் என்று இல்லை. வயதான மூத்த குடிமக்களுக்கும் எதிர்பார்ப்புகள் அதிகம் இருக்கும். பாதுகாப்பு குறித்த அச்சமும் இருக்கும். எனவே வயதானவர்களுக்கு உரிய முக்கியத்துவத்தை கொடுக்க வேண்டும். அவர்களுக்கு உரிய உரிமைகளையும், சுதந்திரத்தையும் அளிக்க வேண்டும் என்பதை உணர்த்தும் வகையிலேயே அக்டோபர் 1ம்தேதி சர்வதேச முதியோர் தினமாக கடைபிடிக்கப்படுகிறது.

இந்திய அரசியல் அமைப்பின்படி பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலம் ஆகியவற்றிற்கு உத்திரவாதம் மற்றும் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள நிலையில் அவற்றை மேலும் தீவிரத்தோடு நடைமுறைப்படுத்தும் நோக்கத்தோடு பெற்றொர் மற்றும் மூத்தகுடிமக்கள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு சட்டம் 2007 மற்றும் விதிகள் 2009 ஆகியவற்றை மத்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்டது. இச்சட்டம் மற்றும் விதிகளின் கீழ் எவ்வித வருமானமற்ற பெற்றோர் தங்களின் முதிர் வயதில் இயல்பு வாழ்க்கையினை அதே நிலையில் தொடர்வதற்காக வாரிசுகளிடமிருந்து பராமரிப்பு தொகை வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், தஞ்சாவூர் மாவட்டத்தில், மாவட்ட சமூக நல அலுவலக கட்டுப்பாட்டின் கீழ் 21 முதியோர் இல்லங்கள் செயல்பட்டு வருகிறது. அதில் மத்திய அரசின் நிதியுதவியுடன் 4 முதியோர் இல்லங்கள் செயல்பட்டு வருகிறது. 17 தனியார் முதியோர் இல்லங்கள் உரிமம் பெற்று செயல்பட்டு வருகின்றது. இம்முதியோர் இல்லங்களில் 540 முதியோர்கள் தங்கி பயனடைந்து வருகின்றனர். இவர்களுக்கு நல்ல முறையில் தங்குமிடம், உணவு, உடை, மருத்துவ வசதி ஆகியவகைகள் கொடுக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றனர் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் பேசினார்

இவ்விழாவில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ரங்கராஜன், காவல் உதவி ஆய்வாளர் (அனைத்து மகளிர் காவல் நிலையம்) திருமதி.வேதநாயகி, மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.ராஜேஸ்வரி, மருத்துவ கல்லூரி மனநல மருத்துவர் மரு.ரங்கநாதன், முதன்மை வழக்கறிஞர் திருமதி.மகா சண்முகம், வட்டார மருத்துவ அலுவலர் மரு.அகிலன், கண்காணிப்பாளர் (மாவட்ட சமூக நல துறை) திரு.செந்தமிழ்ச்செல்வன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்**